குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்,

**முன்னிலை- திருமதி. பி.மகாலட்சுமி எம்.எல்.,**
**நீதித்துறை நடுவர் , ஆரணி.**

2050 திருவள்ளுவராண்டு, விகாரி வருடம், ஐப்பசி திங்கள் 08ம் நாள்.
2019 ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 25ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.01/2017**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
ஆரணி நகரக் காவல் நிலையம்,
குற்ற எண். 618/2016 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

வெங்கடேசன், (46/16),
த/பெ. கன்னியப்பன்,
பள்ளிக்கூடத்தெரு,
ஆரணி & தாலுக்கா.

...எதிரி

இந்த வழக்கு 06.01.2017 ஆம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 10.10.2019 அன்று விசாரிக்கப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில், **அரசுக் குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1** அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் **திருவாளர். A. தணிகாசலம்** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்,

**தீர்ப்புரை**

26.07.2016ம்தேதி பகல் 12 மணிக்கு ஆரணி கோட்டை தெரு தமிழ்நாடு மெர்கண்டைல் பேங்க் ஏடிஎம் எதிரே அசா1 முரளி, அசா2 பாலாஜி, அசா5 கருணாகரன், அசா6 ஸ்ரீராம், அசா3 நாகராஜ் ஆகியோர் நடந்து சென்றுகொண்டிருந்தபோது அவர்களை எதிரி வழிமடக்கி ங்கோத்தா, தேவிடியா பையா என்று அசிங்கமாகத் திட்டி, அசா1 முரளிக்கும் எதிரிக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக எதிரி கையால் அசா1 முரளியின் முகத்தின் மீது குத்தி, இடது கன்னத்தின் மீது அடித்து, இதனை புகார் கொடுத்தால் உன்னையும் உன்னை சார்ந்தவர்களையும் ஒழித்துவிடுவேன் என்று அசா1 முரளிக்கு கொலை மிரட்டல் விடுத்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 352, 506(1)-ன்கீழ் 12.08.2016 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது அவருக்கு இவ்வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207ன்கீழ் வழங்கப்பட்டது.

3. எதிரியிடம் இவ்வழக்கு குற்றம் குறித்து வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே, எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 341, 294(பி), 352, 506(1)-ன் கீழான குற்றம் குறித்து வினவிய போது, எதிரி குற்றத்தை மறுத்து வழக்காட தனது விருப்பத்தைத் தெரிவித்தார்.

4. எதிரியின் குற்ற மறுப்பினையடுத்து, அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசுத்தரப்பில் மொத்தம் 7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், 1 முதல் 5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் உள்ளது.

**அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:**

5. புகார்தாரரான அசா1 முரளி அவர் ஆட்டோ ஓட்டுனராக இருப்பதாகவும், ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் மூலமாக யூனியனுக்குப் பணம் செலுத்தி வந்ததாகவும், அதன் வரவு செலவு கணக்குகளைப் பார்க்க எதிரியிடம் அந்த பொறுப்பைக் கொடுத்திருந்தபோது அவர் அந்த கணக்கைச் சரியாகக் காட்டாததால் அவர் மீது ஒரு மாதத்திற்கு முன்பு புகார் செய்து வரவு செலவு கணக்கை ஒப்படைக்க செய்தார்கள் என்றும், அதன்படி எதிரி கொடுக்க வேண்டிய பணத்தைத் தராமல் இருந்து வந்ததால் ஆட்டோ யூனியன் ஓட்டுனர்கள் மீது எதிரி காழ்ப்புணர்ச்சி கொண்டு அதனால் 26.07.2016 அன்று பகல் 12 மணிக்கு அவரும் அவருடன் ஆட்டோ ஓட்டும் நண்பர்கள் அசா3 நாகராஜ், அசா5 கருணாகரன், அசா2 பாலாஜி, அசா6 ஸ்ரீராம் ஆகியோர் எம்எல்ஏ ஆபிஸ் ஆட்டோ ஸ்டேண்டிடமிருந்து டீ குடிக்க பழைய பேருந்து நிலையம் பக்கமாகச் சென்றபோது தமிழ்நாடு மெர்கண்டைல் பேங்க் எதிரே எதிரி அவர்களை வழிமடக்கி ங்கோத்தா, தேவிடியா பையா என்று ஆபாசமாகத் திட்டி அவர் மீது புகார் கொடுத்து ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லி, வலது கையால் அசா1 முரளியின் முகத்தின் மீது குத்தி இடது கன்னத்தில் அடித்து, அவரிடம் வைத்துக்கொண்டால் அசா1 முரளி மற்றும் அவரைச் சார்ந்தவர்களை அடித்து வாழவிடாமல் ஒழித்துவிடுவேன் என்று மிரட்டி சென்றபின்னர் அசா1 முரளிக்கு காயம் எதுவும் இல்லாததால் மருத்துவமனைக்குச் செல்லவில்லை என்றும் மீண்டும் 29.07.2016 அன்று காலை 10 மணிக்கு அவரை எதிரி மிரட்டி வந்ததால் நிலையம் சேர்ந்து அசா1 கொடுத்த புகாரினைப் பெற்ற இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் அசா7 சுந்தர்ராஜி அவர்கள் 29.07.2016 அன்று பகல் 1 மணிக்கு எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 352, 506(1)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அசாஆ4 பதிவு செய்து அன்றே பகல் 1.45 மணிக்கு சம்பவம் நடந்த இடமான கோட்டை வடக்கு தெரு தமிழ்நாடு மெர்கண்டைல் பேங்க் ஏடிஎம் அருகே சென்று சாட்சிகள் அசா4 சத்தியமூர்த்தி, அசா3 நாகராஜ் முன்னிலையில் பார்வை மகசர் அசாஆ2, மாதிரி வரைபடம் அசாஆ5 தயார் செய்து சாட்சிகள் விசாரணை செய்து அன்றே மாலை 4 மணிக்கு ஜெமினி சோடா கடையருகில் எதிரியைக் கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி

சாட்சிகள் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 352, 506(1)-ன்கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் பின்வருமாறு:**

6. புகார்தாரரான அசா1 முரளி 26.07.2016 அன்று பகல் 12 மணிக்கு அவருக்கும் எதிரிக்கும் இடையே இருந்த பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான முன்விரோதம் காரணமாக எதிரி அவரை மடக்கி அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கையால் முதுகு, வலது கன்னத்தில் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அங்கு அவர் அடிப்பட்டதை பாலாஜி, நாகராஜ் மற்றும் ஒருவர் பார்த்ததாகவும் 29.07.2016 அன்று காவல் நிலையத்தில் புகார் அசாஆ1 கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. புகார்தாராான அசா1 முரளியுடன் சம்பவ இடத்தில் இருந்த அசா2 பாலாஜி 26.07.2016 அன்று ஆட்டோ ஸ்டேண்டு அருகில் உள்ள டீ கடைக்கு சென்றபோது அவருடன் வந்த முரளிக்கும் எதிரிக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக எதிரி அவர்களை வழிமடக்கி முரளியுடன் சென்ற அவர்கள் அனைவரையும் தகாத வார்த்தைகளால் திட்டி முரளியை எதிரி கையால் கன்னம், முதுகில் அடித்து அவர்கள் அனைவரையும் ஒழித்து விடுவதாகக் கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், முரளிக்கு லேசான காயம் இருந்ததால் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றும், அந்த சம்பவத்தை நாகராஜ், ஸ்ரீராம், சத்தியா மற்றும் பலர் பார்த்ததாகச் சாட்சியம் அளித்துள்ளார்.

8. கண்ணுற்ற சாட்சியான சம்பவத்தன்று அசா1 முரளியுடன் இருந்த அசா5 கருணாகரன் 3 வருடத்திற்கு முன்பு அவர் நகர காவல் நிலையம் முன்பு ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்தபோது, போலீசார் அழைத்து கையெழுத்து வாங்கியதாகவும், முரளியை யார் அடித்து திட்டினார்கள் என்று அவருக்குத் தெரியாது என்றும், எதையும் அவர் பார்க்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் வெங்கடேசன் முரளியை சும்மா தட்டியதாக சொன்னார்கள் என்றும், அவர்கள் ஒன்றாக இருந்தபோது போலீசார் அவர்களை அழைத்து முகவரி கேட்டு கையெழுத்து செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. கண்ணுற்ற சாட்சியான சம்பவத்தன்று அசா1 முரளியுடன் இருந்த அசா6 ஸ்ரீராம் சம்பவத்தைப் பற்றி அவருக்கு எதுவும் தெரியாது என்றும், முரளியை எதிரி அடித்ததால் ஜெயில் தண்டனை அனுபவித்ததாகக் கேள்விப்பட்டதாகவும் , அவர் எதையும் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10. கண்ணுற்ற மற்றும் பார்வை மகசர் சாட்சியான அசா3 நாகராஜ் 26.07.2016 அன்று எதிரிக்கும் முரளிக்கும் இருந்த பிரச்சினை சம்மந்தமாக காவல் நிலையம் சென்றுவிட்டு வெளியே வந்தபோது எதிரி முரளியை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, கையால் கன்னம், முதுகில், அடித்து கொலை மிரட்டல் விடுத்தாகவும், பின்னர் 29.07.2016 அன்று போலீசார்

பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள ஏடிஎம் பக்கத்தில் வந்து விசாரித்து வரைபடம் வரைந்து சாட்சியாக இருக்க சொல்லி அவரிடமும், சத்தியாவிடமும் கையெழுத்து கேட்டதாகவும், அவர்கள் இருவரும் கையெழுத்து செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் பார்வை மகசர் அசாஆ2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. கண்ணுற்ற மற்றும் பார்வை மகசர் சாட்சியான அசா4 சத்தியமூர்த்தி 29.07.2016 அன்று பகல் 1.45 மணிக்கு அவர் ஆட்டோ சவாரி முடித்து டீ கடைக்கு சென்றபோது போலீசார் சம்பவ இடம் வந்து வரைபடம் வரைந்து அதில் அவரை சாட்சியாக இருக்கச் சொல்லி கையெழுத்து கேட்டார்கள் என்றும், அதில் முரளி மற்றும் வெங்கடேசனுக்கு நடந்த சண்டைக்காக அவரும் நாகராஜும் கையெழுத்து செய்ததாகவும், பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து அவருடையதுதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் பார்வை மகசரில் உள்ள அவருடைய கையெழுத்து மட்டும் அசாஆ3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அசா7 உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜி அவர்கள் அசா1 முரளியிடமிருந்து புகார் பெற்று வழக்கு பதிவு செய்து சாட்சிகள் விசாரணை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்க்ல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

13. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகள் எதிரிக்கு எதிராக அளித்த சாட்சியப் பகுதிகளைச் சுட்டிக்காட்டி எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவ எதிரி சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தும், தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார்.

14. இந்த வழக்கில் எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. எனவே, எதிரி தரப்பில் எந்த ஒரு சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

15. **இந்த வழக்கில் எதிரி மீதான குற்றம் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்களின் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா, இல்லையா, என்பதே தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய அம்சமாகும்.**

16. கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்கள் அசா1 முரளி மற்றும் அவருடன் சென்ற அசா2 பாலாஜி, அசா5 கருணாகரன், அசா6 ஸ்ரீராம், அசா3 நாகராஜ் ஆகியோரை எதிரி வழிமடக்கி, அசா1 முரளியை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி, கையால் அடித்து, ஒழிக்காமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததை அரசுத்தரப்பு சாட்சிகள் நிரூபித்துள்ளதால் எதிரியைத் தண்டிக்க வேண்டி வாதிட்டார்.

17. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் அவர்கள் அசா4 சத்தியமூர்த்தி அவரும், அசா3 நாகராஜும் வெள்ளை பேப்பரில் கையெழுத்து செய்ததாகக் குறுக்கு விசாரணையில் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், பிரிவு 294(பி)ன்கீழான குற்றத்திற்குச்

சாட்சியம் எதுவும் இல்லை என்றும், சம்பவம் 26.07.2016 அன்று நடந்திருந்தாலும் புகாரானது தாமதமாக 29.07.2016 அன்றுதான் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சிய முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி எதிரியை விடுவிக்க வேண்டினார்.

18. எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 341, 294(பி), 352, 506(1)ன்கீழான குற்றம் நிரூபிக்கப்படவேண்டுமென்றால், எதிரிதான் அசா1 முரளி மற்றும் அவருடன் சென்ற அசா2 பாலாஜி, அசா5 கருணாகரன், அசா6 ஸ்ரீராம், அசா3 நாகராஜ் ஆகியோரை வழிமடக்கி அசா1 முரளியை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி, கையால் அடித்து, ஒழிக்காமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததை அரசுத்தரப்பு சாட்சிகள் நிரூபித்திருக்க வேண்டும்.

19. இந்த வழக்கில் புகார்தாரர் அசா1 முரளி எதிரிக்கும் ஆட்டோ யூனியன் ஓட்டுனர்கள் மீது எதிரி யூனியனின் கணக்குகளைச் சரியாகப் பராமரிக்காதது சம்மந்தமாகப் புகார் கொடுத்ததால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியால் அசா1 முரளி மற்றும் அவருடன் சென்ற அசா2 பாலாஜி, அசா5 கருணாகரன், அசா6 ஸ்ரீராம், அசா3 நாகராஜ் ஆகியோரை எதிரி 26.07.2016 அன்று பகல் 12 மணிக்கு அவர்கள் எம்எல்ஏ ஆபிஸ் ஆட்டோ ஸ்டேண்டிலிருந்து டீ சாப்பிட சென்றுகொண்டிருந்தபோது தமிழ்நாடு மெர்கண்டைல் பேங்க் ஏடிஎம் எதிரே எதிரி அவரை வழிமடக்கி அவர்களை ங்கோத்தா, தேவிடியாபையா என்று ஆபாசமாகத் திட்டி அசா1 முரளியைக் கையால் முகத்தின் மீது குத்தி இடது கன்னத்தில் அடித்து மிரட்டியதாகப் புகார் அசாஆ1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், புகார்தாரரான அசா1 முரளி 26.07.2016 அன்று அவருடன் மற்ற அரசுத்தரப்பு சாட்சிகள் வந்ததாகவோ, அவர்கள் அனைவர் மீதும் எதிரிக்கு ஏற்கனவே விரோதம் இருந்ததாகவோ, அவர்கள் அனைவரையுமே எதிரி வழிமடக்கியதாகவோ சாட்சியம் அளிக்காமல் அவர் மட்டும் சென்றபோது எதிரி அவரை மடக்கி கையால் முதுகு, வலது கன்னத்தில் அடித்ததாக முரண்பட்டு முதல் விசாரணையிலேயே சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தன்று அசா1 முரளியுடன் இருந்ததாகப் புகார் அசாஆ1ல் குறிப்பிடப்பட்டுள்ள அசா2 பாலாஜி, அசா3 நாகராஜ், அசா4 சத்தியமூர்த்தி, அசா5 கருணாகரன், அசா6 ஸ்ரீராம் ஆகியோர் ஆட்டோ சங்கத்தின் ஓட்டுனர்கள் மீது எதிரி விரோதம் கொண்டதாகச் சாட்சியம் அளிக்காமல், அசா1 முரளிக்கும் எதிரிக்கும் இருந்த விரோதத்தினால் எதிரி அசா1 முரளியை வழிமடக்கியதாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர். மேலும், கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அசா2 பாலாஜி, அசா1 முரளியின் சாட்சியத்திற்கு முரண்பட்டு 27.07.2016 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது விசாரணையில் எதிரி காவல் நிலையத்திலேயே அசா1 முரளியைப் பார்த்து எனக்கு எதிராக சாட்சி சொல்கிறாயா என்று கேட்டு அடித்ததாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

20. அதுமட்டுமின்றி சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் சம்பவ இட சாட்சிகளாக அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா5 கருணாகரன், அசா6 ஸ்ரீராம் ஆகிய இருவருமே முரளியை யார் அடித்தார்கள், திட்டினார்கள் என்று தெரியாது என்றும், அவர்கள் எதையும் பார்க்கவில்லை என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர். மேலும், சம்பவமானது கடைகள் நிறைய உள்ள பொதுமக்கள் அருகில் நடமாடக்கூடிய இடத்தில் பகல் நேரத்தில்

நடந்துள்ளதாக இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி தயார் செய்துள்ள வரைபடம் அசாஆ5ஐ பார்க்கையில் தெரிகிறது. ஆனால், அவ்வாறு சம்பவம் நடந்திருக்கும்பட்சத்தில் அங்கிருந்த அசா1 முரளியைச் சார்ந்தவர்கள் அல்லாமல் தனிநபர் சாட்சிகள் யாரும் இந்த வழக்கில் விசாரிக்கப்படவில்லை.

21. அசா1 முரளி சம்பவம் எங்கு நடந்தது என்றும் அவர் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அதற்கேற்றாற்போல், அசா2 பாலாஜி சம்பவமானது அவர்கள் டீ கடைக்குச் சென்றபோது நடந்ததாகவும், அசா3 நாகராஜ் அவர்கள் காவல் நிலையம் சென்றுவிட்டு வெளியே வந்தபோது நடந்ததாகவும் என்று மூன்று விதமான சந்தர்ப்பங்களில் எதிரி அசா1 முரளியை வழிமடக்கியதாகப் புகார் அசாஆ1க்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால், உண்மையில், எதிரி அசா1ஐ வழிமடக்கினாரா என்ற சந்தேகம் எழுகிறது. அதுமட்டுமின்றி புகார்தாரர் அசா1 முரளியே புகாரில் உள்ள சங்கதிகள் பற்றி அவருக்குத் தெரியாது என்றும், அவர் வீட்டில் இருந்து வந்தபோது எற்கனவே புகார் கொடுத்தது சம்மந்மதமாகப் போலீசார் கையெழுத்து போட சொன்னதால் காவல் நிலையத்தில் கையெழுத்து செய்ததாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் புகார் அசாஆ1ன் மீதே சந்தேகம் எழுகின்றது. இந்த முரண்பாடுகள் எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றம் மீது சந்தேகத்தை எழ வைக்கின்றது. மேலும் சம்பவம் நடந்த இடம் குறித்தும் எதிரி அசா.1 முரளியை வழி மடக்கினார் என்று அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகள் அசா.2 பாலாஜி, அசா.3 நாகராஜ், அசா.5 கருணாகரன், அசா.6 ஸ்ரீராம் ஆகியோர் சத்தியம் அளிக்காததால் எதிரி மீதான இதச பிரிவு 352 கீழான குற்றம் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

22. மேலும், அசா1 முரளி, அசா2 பாலாஜி, அசா3 நாகராஜ் ஆகிய மூவருமே எதிரி அசா1 முரளியை வழிமடக்கி கையால் அசா1 முரளியை அடித்து மிரட்டியதாகச் சாட்சியம் அளித்திருந்தாலும், அசா1 முரளி எதிரி அவரை மட்டும் மிரட்டியதாகச் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அசா2 பாலாஜி அவர்கள் அனைவருமே எதிரி மிரட்டியதாகவும், அசா3 நாகராஜ் எதிரி யாரை மிரட்டினார் என்று சாட்சியம் அளிக்காமல் மூவருடைய சாட்சிகளும் முரண்பட்டு உள்ளது. இது மட்டும் அன்றி அசா.2 பாலாஜி அவர்கள் டீ கடைக்கு சென்ற போது எதிரி வழிமடக்கி மிரட்டியதாக முதல் விசாரணையில் சத்தியம் அளித்துவிட்டு அவரே மீண்டும் குறுக்கு விசாரணையில் காவல் நிலையத்திலேயே சம்பவம் நடந்ததாகவும், அப்போது 60 என்று இருந்ததாகவும் முரண்பட்டு சத்தியம் அளித்துள்ளார்.அதே போல் அசா3 நாகராஜயும், அசா1 முரளி மற்றும் அசா2 பாலாஜியின் சத்தியங்களுக்கு முரண்பட்டு அவர்கள் காவல் நிலையம் சென்று விட்டு வெளியே வந்த போது எதிரி மிரட்டியதாக சத்தியம் அளித்துள்ளனர். ஆகவே இந்த மூவருமே ஒருவருக்கொருவர் முரண்பட்டு அளித்துள்ள சத்தியமே எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட இதச பிரிவு 506(1) கீழான குற்றம் அரசு தரப்பில் நிரூபிக்க என்றே இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

23. மேலும், அசா1 முரளி, அசா2 பாலாஜி, அசா3 நாகராஜ் ஆகிய மூவருமே எதிரி என்ன ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காததால் எதிரி மீதான இதச பிரிவு 294(பி)ன்கீழான குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. பார்வை மகசர் சாட்சியான அசா4 சத்தியமூர்த்தி அவரும், அசா3 நாகராஜும் வெள்ளை பேப்பரில் கையெழுத்து செய்ததாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள்.

24. அசா1 முரளி, அசா2 பாலாஜி, அசா3 நாகராஜ் ஆகிய மூவருமே எதிரி அசா1 முரளியைக் கையால் முதுகு, வலது கன்னத்தில் அடித்ததாகச் சாட்சியம் அளித்திருந்தாலும், அசா1 முரளி அவர் மருத்துவர் கூறிய காயங்களைத் தான் பதிவு செய்தார் என்று குறுக்கு விசாரணையில் அளித்துள்ள சாட்சியம் புகார் அசாஆ1ல் அவர் காயங்கள் எதுவும் இல்லாததால் மருத்துவமனைக்குச் செல்லவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதற்கு முரண்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே, விவாதித்தபடி சம்பவம் நடந்த இடம் குறித்து எதிரி அசா1 முரளியை வழிமடக்கியபோது அசா2 பாலாஜி, அசா3 நாகராஜ் அங்கிருந்ததாக அசா1 முரளியே சாட்சியம் அளிக்காத பட்சத்திலும், அசா2 பாலாஜி மற்றும் அசா3 நாகராஜ், அசா1 முரளி ஆகியோரின் சாட்சியத்திற்கு உள்ள முரண்பாடுகள் அசா5 கருணாகரன், அசா6 ஸ்ரீராம் ஆகியோர் அசா1 முதல் அசா3 சாட்சிகளுக்கு ஒத்தேற்கும் வகையில் சாட்சியம் அளிக்காதது அசா1 முரளியே புகாரில் என்ன உள்ளது என்று தனக்கு தெரியாது என்று முரண்பட்டு அளித்துள்ள சாட்சியம் எதிரி மீது அரசத்தரப்பில் சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 294(பி), 341, 352 506(1)ன்கீழான குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

25. **இறுதியாக, எதிரி மீது அரசத்தரப்பில் சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 341, 294(பி), 352, 506(1)-ன்கீழான குற்றம் அரசத்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்படி சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

26. இவ்வழக்கில் எதிரி எழுதி கொடுத்த பிணைப்பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

27. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் வழக்கு சொத்து குறித்த உத்தரவு இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2019ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- பி.மகாலட்சுமி,
நீதித்துறை நடுவர்,
ஆரணி.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்-</u>**

அ.சா.1 - முரளி (புகார்தாரர்)

அ.சா.2 - பாலாஜி

அ.சா.3 - நாகராஜ்

அ.சா.4 - சத்தியமூர்த்தி

அ.சா.5 - கருணாகரன்

அ.சா.6 - ஸ்ரீராம்

அ.சா.7 - சுந்தர்ராஜ் (உதவி ஆய்வாளர்)

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்-</u>**

அ.சா.ஆ.1 - புகார்

அ.சா.ஆ.2 - பார்வை மகசர்

அ.சா.ஆ.3 - பார்வை மகசரில் முதலாவதாக உள்ள அசா4ன் கையெழுத்து

அ.சா.ஆ.4 - முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.5 - மாதிரி வரைபடம்

**அரசுத்தரப்பு சான்றுபொருட்கள்-** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள்-** இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்** - இல்லை.

ஒம்/- பி.மகாலட்சுமி,
நீதித்துறை நடுவர்,
ஆரணி.

குறிப்பு-

வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது. எந்த ஒரு சாட்சியையும் 3 தினங்களுக்கு மேல் விசாரணைக்காக அழைக்கப்படவில்லை. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்துள்ளார்.

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
ஆரணி.